சிறந்த சேவையைப் பாராட்டி

காவல்துறையில் 129 பேருக்கு அண்ணா பதக்கங்கள்: முதல்வர் ஸ்டாலின் உத்தரவு

வெள்ளத்தில் 448 பேரை காப்பாற்றிய 2 தீயணைப்பு வீரர்களுக்கு அண்ணா வீரதீர பதக்கம்

சென்னை, செப்.14– பேரறிஞர் அண்ணாவின் பிறந்த நாளை முன்னிட்டு 129 தமிழக காவல்துறை மற்றும் சீருடை அலுவலர்கள்– பணியாளர்களுக்கு அண்ணா பதக்கங்கள் வழங்க முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆணையிட்டுள்ளார்.

இதுசம்பந்தமாக அரசு வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:–

இந்த ஆண்டு, காவல் துறையில் தலைமைக்காவலர் முதல் காவல் கண்காணிப்பாளர் வரையிலான 100 பணியாளர்கள் மற்றும் அலுவலர்களுக்கும், தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறையில் தீயணைப்பு வீரர் முதல் துணை இயக்குநர் வரையிலான 10 பணியாளர்கள் மற்றும் அலுவலர்களுக்கும், சிறைகள் மற்றும் சீர்திருத்த பணிகள் துறையில் முதல்நிலை சிறைக்காவலர் முதல் உதவி சிறை அலுவலர் வரையிலான 10 பணியாளர்கள் மற்றும் அலுவலர்களுக்கும், ஊர்க்காவல்படையில் ஊர்க்காவல் படைவீரர் முதல் படைத்தளபதி வரையிலான 5 ஊர்க்காவல் படை அலுவலர்களுக்கும் மற்றும் விரல்ரேகைப் பிரிவில் 2 கூடுதல் காவல் கண்காணிப்பாளர்கள் ஆகியோருக்கும், அவர்களின் மெச்சத்தகுந்த பணியினை அங்கீகரிக்கும் வகையில் "தமிழக முதலமைச்சரின் அண்ணா பதக்கங்கள்" வழங்கிட முதலமைச்சர் ஆணையிட்டுள்ளார்.

448 பேரை காப்பாற்றிய 2 தீயணைப்பு வீரர்கள்

மேலும், தூத்துக்குடி மாவட்டம், ஸ்ரீவைகுண்டம் தீயணைப்பு மற்றும் மீட்புப்பணி நிலையத்தில் பணிபுரிந்து வரும் எஸ்.மந்திரமூர்த்தி, ராமச்சந்திரன் ஆகிய இருவரும் கடந்த 2023 டிசம்பர் 18ம் தேதி இரவு தாமிரபரணி ஆற்றின் கரையில் வெள்ளம் புகுந்த கிராமங்களில் இருந்து மிகவும் ஆபத்தான சூழ்நிலையிலும் மற்றும் மீட்பு பணி சவாலாக இருந்த நிலையிலும், படகுகள் மூலம் சுமார் 448 பேரை மீட்டு பாதுகாப்பான இடத்திற்கு கொண்டு வந்து சேர்த்தனர்.

அவர்களின் துணிச்சல் மற்றும் அர்ப்பணிப்பு செயலை பாராட்டி இருவருக்கும் "தமிழக முதலமைச்சரின் தீயணைப்பு பணிக்கான அண்ணா வீரதீர பதக்கம்" வழங்கிட முதலமைச்சர் ஆணையிட்டுள்ளார்.

மேற்கண்ட பதக்கங்கள் முதலமைச்சரால் பிறிதொரு விழாவில் வழங்கப்படும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

மெட்ரோ ரெயில் திட்ட நிதி, கல்வி நிதி பெற...

(1–ம் பக்கத் தொடர்ச்சி)

துவங்குவதற்கான அனைத்து உதவிகளையும் வழங்குவதற்கு நான் ஆணையிட்டிருக்கிறேன்.

கூகுள் நிறுவனத்துடன்...

அதேபோல, எனது கனவு திட்டமான, 'நான் முதல்வன்' திட்டத்தின் வழியாக தமிழ்நாட்டு இளைஞர்களுக்கு திறன் மேம்பாடு மேற்கொண்டு, அதன் மூலம் வளமான எதிர்காலத்தை உருவாக்கும் வகையில், செயற்கை நுண்ணறிவு, தொழில்நுட்பம் பற்றிய பயிற்சிகள் வழங்கப்படுவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கூகுள் நிறுவனங்களுடன் மேற்கொள்ளப்பட இருக்கிறது.

ஆட்டோடெஸ்க் நிறுவனத்துடன் தமிழ்நாட்டு இளைஞர்களின் திறன்களை மேம்படுத்துவதற்காகவும், குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் (MSME) மற்றும் ஸ்டார்ட்அப்கள் உள்ளிட்ட தொழில்துறை சுற்றுச்சூழல் அமைப்புகளில் போட்டித் தன்மையை மேம்படுத்துவதற்கும் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

இதன்மூலம், தமிழ்நாட்டில் தொழில் தொடங்குவதற்கும், வணிகம் புரிவதற்கும் உகந்த சூழ்நிலையை நிலவுவது மட்டுமல்லாமல், உலகெங்கிலும் இருக்கக்கூடிய முதலீட்டாளர்கள் முதலீடு மேற்கொள்ள விரும்பும் மாநிலமாகவும் தமிழ்நாடு திகழ்ந்து வருவது நிரூபிக்கப்பட்டுள்ளது.

31.8.2024 அன்று சான் பிரான்சிஸ்கோவிலும், 7.9.2024 அன்று சிகாகோ நகரிலும் நடைபெற்ற தமிழ் கூட்டமைப்பு மற்றும் தமிழ் சங்கங்களின் சார்பில் நடைபெற்ற அமெரிக்க வாழ் தமிழர்கள் சந்திப்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு உரையாற்றினேன். இது தமிழ்நாட்டில் நான் இருப்பது போன்ற உணர்வை ஏற்படுத்தியது. அமெரிக்க தமிழ் அமைப்புகள் அனைத்துக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒப்பந்தங்கள் செய்துள்ள அனைத்து நிறுவனங்களுக்கும் என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

எடப்பாடிக்கு பதில்...

கேள்வி : முதலீட்டு ஒப்பந்தம் தொடர்பாகவும், வெளிநாட்டுப் பயணம் தொடர்பாகவும் வெள்ளை அறிக்கை வேண்டும் என்று எதிர்க்கட்சிகள் தொடர்ந்து கோரிக்கை வைத்துக் கொண்டு வருகிறார்கள் அது தொடர்பாக தங்களுடைய கருத்து?

முதலமைச்சர் பதில்:அமெரிக்க பயணத்துக்கு முன்னதாகவே உங்களைச் சந்தித்த போது, தமிழ்நாட்டில் கடந்த மூன்றாண்டுகளில் வந்த முதலீடுகள் குறித்து நான் விளக்கமாகச் சொல்லி இருக்கிறேன். அதுமட்டுமல்லாமல், தொழில் துறை அமைச்சரும் அதுகுறித்து புள்ளிவிவரங்களோடு விளக்கியிருக்கிறார். சட்டமன்றத்தில் தெளிவாக அவர் சொல்லி இருக்கிறார். அதை குறிப்பாக, எதிர்க்கட்சித் தலைவராக இருக்கக்கூடிய எடப்பாடி பழனிசாமி படித்துப் பார்த்து தெரிந்துகொண்டு சொல்லவேண்டும். எடப்பாடி பழனிசாமி முதலமைச்சராக இருந்தபோது, முதலீடுகளை ஈர்ப்பதற்காக வெளிநாடு போனதாகச் சொன்னார். அதில் 10 விழுக்காடு ஒப்பந்தம் கூட நிறைவேறவில்லை என்பதற்கான ஆதாரம் என்னிடம் இருக்கிறது. அதைச் சொன்னால் உள்ளபடியே அவருக்கு பெரிய அவமானமாக இருக்கும். அதனால் அதை தவிர்த்துவிடுகிறேன்.

வெட்கப்பட வேண்டும்

கேள்வி : கோவையில் இரண்டு நாட்களுக்கு முன்பு ஜிஎஸ்டி தொடர்பாக நடைபெற்ற ஆலோசனை கூட்டத்தில் தொழில் செய்பவர்களுக்கு ஜிஎஸ்டி எவ்வளவு கடினமாக இருக்கும் என்று பேசிய அன்னபூர்ணாவின் உரிமையாளர் அடுத்த நாள் அழைத்து மன்னிப்பு கேட்க வைக்கப்பட்டிருக்கிறார். அதை எப்படி பார்க்கிறீர்கள்?

பதில் :ஜிஎஸ்டி குறித்த தொழில் முனைவோர்களின் நியாயமான கோரிக்கைகளை அவர் முன் வைத்தார் என்பதற்காக அதனை ஒன்றிய அமைச்சர் கையாண்டவிதம் என்பது மிகவும் வெட்கப்படவேண்டிய ஒன்று. அதை மக்கள் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

கேள்வி: தமிழகத்திற்கு கிடைக்கவேண்டிய நிதி வேண்டும் என்றால், புதிய கல்விக் கொள்கையை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று மத்திய அமைச்சர் உங்கள் கோரிக்கைக்கு பதில் கொடுத்திருக்கிறார். அதைப்போல, மெட்ரோ ரெயில் பிராஜக்ட் இரண்டிற்கு மத்திய அரசின் பங்களிப்பை இதுவரைக்கும் கொடுக்கவில்லை. நேற்று முன்தினம் கூட மத்திய நிதி அமைச்சர் நான் கடனுதவி பெற்றுக் கொடுத்தோம் என்று விளக்கியிருந்தார். ஆனால், மத்திய அரசின் பங்களிப்பை கொடுக்கவில்லை. இந்த இரண்டு பெரும் நிதி தேவை என்று வலியுறுத்தி பிரதமரை நீங்கள் சந்தித்து வலியுறுத்துவீர்களா?

பிரதமரை சந்திப்பேன்

பதில் :நிச்சயமாக, உறுதியாக.. மெட்ரோ ரயில் திட்டத்திற்கும், பள்ளிக்கல்வித்துறையின்நிதிக்கு புதிய கல்விக் கொள்கை ஏற்றுக் கொள்வது குறித்தும் ஏற்கனவே சம்பந்தப்பட்ட அமைச்சரையும், அதிகாரிகளையும் சந்தித்து வந்திருக்கிறார்கள். இதுகுறித்து பிரதமர் இடத்தில் உடனடியாக நேரம் கேட்டு, நானும் அதுகுறித்து வலியுறுத்த இருக்கிறேன் என்பதை உறுதியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

கேள்வி :அமெரிக்க பயணத்தின்போது எதிர்பார்த்த அளவுக்கு முதலீடுகள் பெறப்பட்டு இருக்கிறதா? குறிப்பாக ஆந்திரா, தெலங்கானா முதலமைச்சர்கள் அமெரிக்க பயணத்தின்போது 25,000 கோடிக்கும் மேல் முதலீடுகள் ஈர்க்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டிருக்கிறது. அது தொடர்பாக ராமதாசின் அறிக்கையில் குறைந்த அளவு முதலீடுகள் தான் இந்த அமெரிக்கா பயணத்தின் மூலம் ஈர்க்கப்பட்டிருப்பதாக அவர் குற்றம் சாட்டியிருக்கிறார். அதை நீங்கள் எப்படி பார்க்கிறீர்கள்?

பதில் :அது எல்லாம் அரசியல் நோக்கத்தோடு சொல்லப்படக்கூடிய விஷயங்கள். நாங்கள் எதிர்பார்த்ததைவிட அதிகமான முதலீடுகள் வந்திருக்கிறது. உறுதியோடு வரக்கூடிய முதலீடுகள் தான் வந்திருக்கிறது. அதில் எந்தவித சந்தேகப்படவேண்டிய அவசியம் இல்லை.

அமைச்சரவையில் மாற்றம்

கேள்வி : அமெரிக்கா பயணத்திற்கு முன்னதாக மாற்றம் ஒன்றே மாறாதது என்று சொல்லியிருந்தீர்கள். அமைச்சரவை மாற்றத்திற்கான கேள்விக்கு□ மாற்றம் நிகழுமா? எதிர்பார்க்கலாமா? கூட்டங்களில் தொண்டர்களின் கோரிக்கைகளை தலைமைக் கழகம் அதை கவனிப்பதாகவும், அது நிறைவேற்றப்படும் என்று சொல்லியிருந்தீர்கள். மாற்றம் நிகழுமா?

பதில் :திமுக என்பது சொன்னதைத்தான் செய்யும். சொல்வதைத்தான் செய்வோம். ஒரே வரியில் சொல்லிவிடுகிறேன். இன்றைக்கு 75–ம் ஆண்டு கொண்டாடக்கூடிய வகையில் தி.மு.க. பவள விழா கொண்டாடப்பட இருக்கிறது. நிச்சயமாக, உறுதியாக நீங்கள் எதிர்பார்க்கக்கூடிய சூழ்நிலை உருவாகும் என்று நம்புகிறேன்.

கேள்வி : வி.சி.க. மது ஒழிப்பு மாநாட்டில் அண்ணா திமுக கலந்துகொள்ள வேண்டும் என்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள். இது அரசியல் கலந்த பேசும்பொருளாக இருக்கிறது. தி.மு.க. கூட்டணியில் ஏதோ சிரத்தன்மை இல்லையா என்பது போல. முதல்வர் என்ன கருதுகிறீர்கள்?

பதில் :அதை திருமாவளவனே தெளிவாக, விளக்கமாக சொல்லியிருக்கிறார். அந்த விளக்கத்துக்கு மேல் பெரிய விளக்கம் நான் சொல்ல வேண்டிய அவசியமில்லை.

கேள்வி : அமெரிக்க பயணம் வெற்றி என்று சொல்கிறீர்கள். அதே சமயம் பாமக நிறுவனர் ராமதாஸ் சொல்லியிருக்கிறார், தெலங்கானா, கர்நாடகா மாநிலங்களில் ஈர்த்த முதலீடுகளை விட இது மிகவும் குறைவாக இருக்கிறது. வெறும் 7000 கோடி முதலீடு என்று சொல்லியிருக்கிறார். இது குறித்து நீங்கள் என்ன கருதுகிறீர்கள்?

திருமாவளவன் மாநாடு பற்றி...

பதில்: அப்படியில்லை. அவர்கள் மாநிலத்திற்கானதை கேட்பதற்கு அவர்களுக்கு உரிமை இருக்கிறது. அதுபோல நாங்களும் நம்முடைய மாநிலத்திற்கு என்னென்ன வேண்டுமோ, என்னென்ன வசதிகள் ஏற்படுத்த வேண்டுமோ அதை கேட்கிறோம்.

கேள்வி : திருமாவளவன் அண்ணா திமுகவுக்கும் அழைப்பு விடுத்திருக்கிறார். விஜயும் எங்களுடைய மது ஒழிப்பு போராட்டத்தில் கலந்து கொள்ளலாம் என்று கூறியது தொடர்பாக

பதில் : திருமாவளவன் அதற்குரிய விளக்கத்தை கொடுத்திருக்கிறார். இது அரசியல் நோக்கத்தோடு நடத்தப்படக்கூடிய மாநாடு இல்லை. எல்லாவற்றிற்கும் தனிப்பட்ட முறையில் நான் அழைப்பு கொடுத்திருக்கிறேனா? அது பொதுவான விஷயம். இதற்கும், அரசியலுக்கும் முடிச்சுப் போடவேண்டாம் என்று தெளிவாக சொல்லியிருக்கிறார். அதுதான் மறுபடியும் நான் சொல்கிறேன்.

கேள்வி: அண்ணா திமுக காலத்தில் 10 சதவீதம் கூட முதலீடுகள் ஈர்க்கப்படவில்லை, நிறைவேற்றப்படவில்லை என்று சொல்லியிருக்கிறீர்கள். 7000 கோடி முதலீடுகள் எப்படி சிறப்பாக செயல்படுத்தப்படும்?

முதலீடுகள் 100 சதவிகிதம் நிறைவேறும்

பதில்: ஏற்கனவே நான் சொல்லியிருக்கிறேன். அமெரிக்கா செல்வதற்கு முன்பு விளக்கம் கொடுத்துவிட்டு இதே நிருபர்களிடம் சொல்லிவிட்டு சென்றேன். சம்பந்தப்பட்ட தொழிற்துறை அமைச்சரும் சொல்லியிருக்கிறார். சட்டமன்றத்திலும் இது பதிவாகியிருக்கிறது. ஏற்கனவே எவ்வளவு முதலீடுகள் வந்தது. எத்தனை பேருக்கு வேலை கிடைத்திருக்கிறது என்று சொல்லியிருக்கிறோம். இப்போதும் சொல்கிறேன். இப்போது வந்திருக்கக்கூடிய முதலீடுகள் 100க்கு 99 என்று கூட சொல்லமாட்டேன். 100 க்கு 100 அதை நிறைவேற்றக்கூடிய வகையில்தான் இந்த முதலீடுகளை நாங்கள் ஈர்த்திருக்கிறோம். அதற்கான வேலைவாய்ப்புகளும் விரைவாக உருவாக்கப்படும். அது வருகிறபோது உங்களுக்கு அவ்வப்போது சொல்கிறோம்.

இவ்வாறு மு.க.ஸ்டாலின் கூறினார்.

சென்னை உயர்நீதிமன்றம்
(உயில் மற்றும் உயில் இல்லாத வழக்கு பற்றிய ஆள்வரை)
முதலேற்பு மனு எண். 440/2024

இந்திய வாரிசுரிமைச் சட்டம் XXIX/1925
தொடர்பான மனுவில் 19.03.2023 அன்று இறந்து போன திருமதி. ஜோதி அவர்களின் கடன் பத்திரங்கள் தொடர்பான மனு

மஞ்சுளா, க/பெ. முருகன்,
எண்.9–27, பிள்ளையார் கோவில் தெரு,
திருமலாபுரம், கடம்பன்குளம், சேர்ந்தமங்கலம்,
திருநெல்வேலி மாவட்டம்–627857 – மனுதாரர்

திருவள்ளூர்–601203, பொன்னேரி, மீஞ்சூர் அஞ்சல், கக்கன்ஜி காலனி, எண்.17 என்ற முகவரியில் வசித்து வந்து 19.03.2023 அன்று இறந்து போன திருமதி. ஜோதி அவர்களின் கடன் பத்திரங்களில் ஏதேனும் பாத்தியதை கோருகின்ற அனைவரும் தங்களுக்கு தக்கதென கருதினால் நீதிமன்றம் வாரிசுரிமைச் சான்றிதழ் வழங்கப்படுவதற்கு முன்பு சென்னை உயர்நீதிமன்ற மாஸ்டர் கோர்ட்டில் 23.09.2024 அன்று காலை 10.30 மணிக்கு மேற்படி மனு விசாரணையின்போது நடவடிக்கைகளைப் பார்த்து தங்களது ஆட்சேபணைகளைத் தெரிவித்துக் கொள்ளுமாறு இதன் மூலம் அறிவிக்கப்படுகிறார்கள்.

2024ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 12ம் தேதி சென்னையில் கையொப்பமிடப்பட்டது.

ஜா. கீதா
மனுதாரரின் வழக்கறிஞர்
நெ.4/7, சுதர்சனம் பில்டிங்,
எரபாலு செட்டி தெரு,
சென்னை–600 001
செல்: 7667687175

S. கண்ணன்
உதவி பதிவாளர்
முதலேற்பு பிரிவு–1
உயர்நீதிமன்றம்
சென்னை–104

பொது அறிவிப்பு

இதன் மூலம் பொதுமக்களுக்கு அறிவிக்கப்படுவது என்னவென்றால், திருவள்ளூர்–600 056, திருமழிசை, உடையார் கோயில், சண்முகபுரம் 1வது தெரு, எண்.49/5ல் வசிக்கும் திரு. நீலகண்டன் மற்றும் திருமதி. சண்முகபிரியா, ஆகிய இருவருக்கும் கீழே குறிப்பிட்டுள்ள சொத்தின் பெயரில் வீட்டுக் கடன் வழங்க உள்ளோம்.

சொத்து விபரம்

திருவள்ளூர் பதிவு மாவட்டம், ஆவடி சார் – பதிவு மாவட்டம், திருவள்ளூர் மாவட்டம், பூந்தமல்லி தாலுக்கா, நேமன் கிராமம், சர்வே எண்.564, பழைய பட்டா எண்.1042, புதிய பட்டா எண்.1047ன் படி புதிய சர்வே எண்.564/1A 1A 1A 1A 1A, "MS SMART CITY" என்ற மனைப்பிரிவு (சி.எம்.டி.ஏ. மனைப்பிரிவு அப்ரூவல் எண்.120/2019, நாள் 01.11.2019)ல் அமைந்துள்ள மனை எண்.133ல் அடங்கிய சுமார் 646 சதுர அடி (60 சதுர மீட்டர்) விஸ்தீரணமுள்ள காலி மனைக்குண்டான நான்கு பக்க எல்லைகள்.

வடக்கில் – மனை எண்.134
தெற்கில் – மனை எண்.132
கிழக்கில் – 7.2 மீட்டர் ரோடு
மேற்கில் – சர்வே எண்.563/1B1, காலி நிலம்

இதன் மத்தியில்
கிழக்கிலிருந்து மேற்காக வடக்குப் பக்கம் – 10 மீட்டர்
கிழக்கிலிருந்து மேற்காக தெற்குப் பக்கம் – 10 மீட்டர்
வடகிலிருந்து தெற்காக கிழக்குப் பக்கம் – 6 மீட்டர்
வடகிலிருந்து தெற்காக மேற்குப் பக்கம் – 6 மீட்டர்

ஆக மொத்தம் 646 சதுரடி அல்லது 60.0 சதுர மீட்டர் விஸ்தீரணமுள்ள காலி நிலம் மட்டும்.

இச்சொத்து பாங்க் ஆப் பரோடா வங்கியின் ஆழ்வார்பேட்டை கிளையில் கடன் பெறுவதற்காக அடமானம் வைக்கப்பட உள்ளது. யாருக்கேனும் கடன் பெறுவதற்காக மேலே உள்ள சொத்தினை அடமானம் வைக்க ஆட்சேபணை ஏதும் இருப்பின் கீழே கொடுக்கப்பட்டுள்ள முகவரியில் தொடர்பு கொண்டு 7 நாட்களுக்குள் ஆட்சேபணை தெரிவிக்கலாம்.

வி.கமல், வழக்கறிஞர்,
பழைய எண்.209, புதிய எண்.224, லிங்கி செட்டி தெரு,
இரண்டாம் தளம், பாரிஸ், சென்னை–600 001,
செல் : 95512 82833.

சென்னை உயர்நீதிமன்றம்
(உயில் மற்றும் உயில் இல்லாத வழக்குபற்றிய ஆள்வரை)
முதலேற்பு மனு எண். 422/2024

இந்திய வாரிசுரிமைச் சட்டம் 39/1925,
தொடர்பான மனுவில் 21/04/2015 அன்று இறந்து போன திருமதி. ராஜ்குமாரி சிங்கால் அவர்களின் கடன் பத்திரங்கள் தொடர்பான வாரிசுரிமை கோரும் மனு

1. திரு. அரவிந்த் குமார் சிங்கால்,
த/பெ. அமர்நாத் சிங்கால்,
D-4-A, திரிபுவன் அபார்ட்மெண்ட்ஸ்,
82, சக்தி நகர், இரண்டாவது அவென்யூ,
அம்பத்தூர், திருவள்ளூர் 600 095.
2 திருமதி. அர்ச்சனா கோயல்,
க/பெ. சுரேந்தர் கோயல்,
3, சிரங்கபாளையம் மேற்கு தெரு,
வேல் அபார்ட்மெண்ட்ஸ், சேலம் 636007.
3. திருமதி. பூனம் சிங்கால்,
க/பெ. (லேட்) அதுல் சிங்கால்,
பிளாட் எண்.1424, கதவு எண். 90, மூன்றாவது மாடி,
13 வது மெயின் ரோடு, அண்ணா நகர், சென்னை 600 040.
4, திரு.சீராகி சிங்கால்,
த/பெ. (லேட்) அதுல் சிங்கால்,
பிளாட் எண். 1424. கதவு எண். 90, மூன்றாவது மாடி,
13 வது மெயின் ரோடு, அண்ணா நகர், சென்னை 600 040.
5. சோகம் சிங்கால் (இளவர்),
த/பெ. (லேட்) அதுல் சிங்கால்,
பிரதிநிதி மூலம் திருமதி. பூனம் சிங்கால்
மூலம் பிரதிநிதித்துவப்படுத்துகிறார்
தாய் மற்றும் இயற்கை பாதுகாவலர்
பிளாட் எண். 1424, கதவு எண். 90, மூன்றாவது மாடி,
13 வது மெயின் ரோடு, அண்ணா நகர், சென்னை 600 040.
..மனுதாரரர்கள்

சென்னை 600 040. அண்ணா நகர், ஐ தொகுதி, 11வது தெரு, பிளாட் எண். 1360, வள்ளலார் குடியிருப்பு என்ற முகவரியில் வசித்து வந்த 21/04/2015 அன்று இறந்து போன திருமதி. ராஜ்குமாரி சிங்கால் அவர்களின் பங்கு பத்திரங்களில் ஏதேனும் பாத்தியதை கோருகின்ற அனைவரும் தங்களுக்கு தக்கதெனக் கருதினால் நீதிமன்றம் வாரிசுரிமைச் சான்றிதழ் வழங்குவதற்கு முன்பு, சென்னை உயர்நீதிமன்ற மாஸ்டர் கோர்ட்டில் 30.09.2024 அன்று காலை 10.30 மணிக்கு மேற்படி மனு விசாரணையின் போது நடவடிக்கைகளைப் பார்த்து தங்களது ஆட்சேபணைகளைத் தெரிவித்துக் கொள்ளுமாறு இதன் மூலம் அறிவிக்கப்படுகிறார்கள்.

2024 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் ஆம் தேது சென்னையில் கையொப்பமிடப்பட்டது .

ஜெயந்தி வெங்கடேஷ்
மனுதாரரின் வழக்கறிஞர்
"வெங்கடா விஜயம்", பிளாட் ஏ, தரை தளம்,
Al. பிளாக் எண் 214 (புதிய எண் 23),
14வது பிரதான சாலை, சாந்தி காலனி,
அண்ணா நகர், சென்னை 600040.
தமிழ்நாடு, இந்தியா.

S. கண்ணன்
உதவி பதிவாளர்
முதலேற்பு பிரிவு 1
சென்னை உயர்நீதிமன்றம்
சென்னை

தேஜஸ்வி ஆஹாரம் லிமிடெட்

எண். 99/5, சினேகா சதன் அபார்ட்மெண்ட்ஸ், நுங்கம்பாக்கம் நெடுஞ்சாலை,
திருமூர்த்தி நகர், நுங்கம்பாக்கம், சென்னை 600034
CIN:L15549TN1994PLC028672, Email: taltdchennai@gmail.com Website: talchennai.in

30வது வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பு

30வது வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள வணிகங்களை பரிவர்த்தனை செய்ய தேஜஸ்வி ஆஹாரம் லிமிடெட் பங்குதாரர்களின் 30வது வருடாந்திர பொதுக்கூட்டம் (AGM) வெள்ளிக்கிழமை, 27 செப்டம்பர், 2024 அன்று மதியம் 02.30 மணிக்கு காணொலி காட்சி(VC)/ இதர ஒளி ஒலி சாதனங்கள் (OAVM) மூலம் நடைபெறும் என்று இதன்மூலம் அறிவிக்கப்படுகிறது.

கார்ப்பரேட் விவகார அமைச்சகத்தால் (MCA) வெளியிடப்பட்ட செப்டம்பர் 25, 2023 தேதியிட்ட, பொதுச் சுற்றறிக்கை எண். 09/2023 மற்றும் செபி–ஆல் வெளியிடப்பட்ட அக்டோபர் 7, 2023 தேதியிட்ட சுற்றறிக்கை SEBI/HO/CFD/CFD-PoD-2/P/CIR/2023/167 (இனிமேல் கூட்டாக "சுற்றறிக்கைகள்" என்று குறிப்பிடப்படுகிறது) ஆகியவை நிறுவனங்கள் ஒரு பொதுவான இடத்தில் உறுப்பினர் நேரடியாக ஆஜராகாமல் VC/OAVM மூலம் வருடாந்திர பொதுக்கூட்டத்தை நடத்த அனுமதித்தது. எனவே, சுற்றறிக்கைகளுக்கு இணங்க, நிறுவனத்தின் 30வது வருடாந்திர பொதுக் கூட்டம் VC மூலம் நடத்தப்படுகிறது. 30வது வருடாந்திர பொதுக் கூட்டம் நடைபெறும் இடம், நிறுவனத்தின் பதிவு அலுவலகமாக இருக்கும்.

மேற்கூறிய சுற்றறிக்கைகளுக்கு இணங்க, நிறுவனம்/ டெபாசிட்டரி பங்கேற்பாளரிடம் மின்னஞ்சல் முகவரியை பதிவு செய்த அனைத்து உறுப்பினர்களுக்கு 30வது வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பு மற்றும் 2023–24–ம் ஆண்டுக்கான வருடாந்திர அறிக்கை ஆகியவை மின்னணு முறையில் அனுப்பப்பட்டுள்ளன. இந்த ஆவணங்கள் நிறுவனத்தின் இணையதளமான http://www.talchennai.com/ல் கிடைக்கும். இந்த அறிவிப்பை பங்குச் சந்தைகள் அதாவது பிஎஸ்இ லிமிடெட் (www.bseindia.com) இணையதளங்களிலிருந்தும் அணுகலாம்.

வருடாந்திர பொதுக்கூட்டம் நடைபெறுவதையொட்டி, நிறுவனங்கள் சட்டம், 2013, பிரிவு 91 மற்றும் செபி பட்டியல் விதிகள், 2015ன் விதி 42 ஆகியவற்றின்படி, உறுப்பினர்கள் பதிவேடு மற்றும் பங்கு பரிமாற்ற புத்தகங்கள் 21 செப்டம்பர், 2024 முதல் 27 செப்டம்பர், 2024 வரை (இரண்டு நாட்களும் உள்பட) மூடப்பட்டிருக்கும்.

30வது வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள வணிகங்களில் வாக்களிக்கும் உரிமையைப் பயன்படுத்துவதற்கு நிறுவனம் அதன் உறுப்பினர்களுக்கு தொலைதூர மின்னணு வாக்களிப்பு மற்றும் வருடாந்திர பொதுக்கூட்டத்தில் மின்னணு வாக்களிப்பு ஆகிய இரண்டின் மூலம் வாக்களிக்கும் வசதியை வழங்குகிறது. அனைத்து உறுப்பினர்களுக்கும் இதன் மூலம் தெரிவிக்கப்படுவது:

1. உறுப்பினர்கள் 30வது வருடாந்திர பொதுக்கூட்டத்தில் VC/OAVM மூலம் 27 செப்டம்பர், 2024 அன்று மதியம் 02.30 மணிக்கு கலந்து கொள்ளலாம்.
2. கட்ஆப் தேதியான வெள்ளிக்கிழமை, செப்டம்பர் 21, 2024 அன்று உறுப்பினர்கள் பதிவேடு அல்லது டெபாசிட்டரிகளால் பராமரிக்கப்படும் நன்மை பயக்கும் உரிமையாளர்களின் பதிவேட்டில் இடம் பெற்றுள்ள உறுப்பினர்கள் தொலைதூர மின்வாக்களிப்பு வசதி அல்லது வருடாந்திர பொதுக்கூட்டத்தில் வாக்குரிமையைப் பெறுவதற்கு மட்டுமே தகுதியுடையவர்கள் ஆவர்.
3. வருடாந்திர பொதுக்கூட்ட காலத்தில் தொலைதூர மின்னணு வாக்களிக்கும் வசதி மற்றும் மின்னணு வாக்களிக்கும் முறையை வழங்குவதில் சிடிஎஸ்எல் ஈடுபட்டுள்ளது.
4. தொலைதூர மின்னணு வாக்களிப்பு செவ்வாய்க்கிழமை, 24 செப்டம்பர், 2024 அன்று காலை 9.00 மணிக்கு (IST) தொடங்கி வியாழக்கிழமை 26 செப்டம்பர் 2024 மாலை 5.00 மணிக்கு (IST) முடிவடையும். செப்டம்பர் 26, 2024 அன்று மாலை 5:00 மணிக்கு மேல் (IST) தொலைதூர மின்வாக்களிப்பு அனுமதிக்கப்படாது. மேலும் ஒரு தீர்மானத்தின் மீது உறுப்பினர் வாக்களித்த பிறகு, உறுப்பினர் அதை மாற்ற அனுமதிக்கப்படமாட்டார்.
5. வருடாந்திர பொதுக்கூட்டத்திற்கு முன்னதாக தொலை மின்வாக்களிப்பு மூலம் வாக்களித்த உறுப்பினர்கள் VC/OAVM மூலம் வருடாந்திர பொதுக்கூட்டத்தில் கலந்து கொள்ளலாம், ஆனால் மீண்டும் வாக்களிக்க உரிமை இல்லை. தொலைதூர மின்னணு வாக்களிப்பு மூலம் வாக்களிக்காத மற்றும் VC/OAVM மூலம் வருடாந்திர பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்ட உறுப்பினர்கள், வருடாந்திர பொதுக்கூட்டத்தில் மின்னணு வாக்களிப்பு மூலம் வாக்களிக்கத் தகுதியுடையவர்கள் ஆவர்.
6. தங்களின் மின்னஞ்சல் முகவரிகளைப் பதிவு செய்யாத உறுப்பினர்கள், அந்தந்த டெபாசிட்டரி பங்கேற்பாளரிடம் டிமெட்டீரியலைஸ்ட் வடிவத்தில் வைத்திருக்கும் பங்குகள் மற்றும் காகித வடிவத்தில் வைத்திருக்கும் பங்குகளைப் பொறுத்தவரை, நிறுவனத்தின் ஆர்டிஏ–க்கு மின்னஞ்சல் முகவரி, மொபைல் எண், பான் கார்டின் சுய சான்றளிக்கப்பட்ட நகல் மற்றும் பங்குச் சான்றிதழின் நகல், கோரிக்கை கடிதத்தின் கையொப்பமிடப்பட்ட ஸ்கேன் செய்யப்பட்ட நகலுடன் மின்னஞ்சல் கோரிக்கையை அனுப்புவதன் மூலம் பதிவு செய்யுமாறு அல்லது வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பில் வழங்கப்பட்ட செயல்முறையைப் பின்பற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.
7. மின்னணு வாக்களிப்பு செயல்முறையை நியாயமான மற்றும் வெளிப்படையான முறையில் நடத்துவதற்காக M/s. BY & அசோசியேட்ஸ், காஸ்ட் அக்கவுண்டண்ட்ஸ், சென்னை அவர்களை ஆராய்வாளராக இயக்குநர்கள் குழு நியமித்துள்ளது.
8. மின்னணு வாக்குப்பதிவின் முடிவு வருடாந்திர பொதுக்கூட்டம் முடிந்த 2 வேலை நாட்களுக்குள் நிறுவனத்தால் அறிவிக்கப்படும் மற்றும் பங்குச் சந்தைகளுக்கும் தெரிவிக்கப்படும்.

குழுவின் ஆணைப்படி
தேஜஸ்வி ஆஹாரம் லிமிடெட்டுக்காக
ஒப்பம்/–
ஷியாம்குமார்
நிர்வாக இயக்குனர்
DIN: 09098976

தேதி : 03.09.2024
இடம் : சென்னை

NOTICE LOSS OF SHARE CERTIFICATE(S) TVS Motor Company Limited
(FOR CLAIM FROM IEPF AUTHORITY)

Notice is hereby given that the following share certificate(s) of **TVS Motor Company Limited** has/have been lost or misplaced or stolen and registered holder/legal heir is/are in the process of applying to Investor Education and Protection Fund (IEPF) Authority for refund of the shares and dividends transferred to IEPF.

FOLIO NO	Name Of Shareholder(s)	No.Of Shares	Share Certificate No(s)	Distinctive Nos. From	Distinctive Nos. To
S13892	SUDHA AGARWAL	5000 5000	935 19590	927151 242263430	932150 242258431

This notice is being issued as per Schedule III of the Investor Education and Protection Fund Authority (Accounting, Audit, Transfer and Refund) Rules, 2017, as amended from time to time. The public are hereby warned against purchasing or dealing in any way, with the above share certificates. Any person(s) who has / have any claim in respect of the said share certificate(s) should lodge such claim with evidence to the Company, at its Registered Office, **M/s TVS